உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பன்னிரு திருமுறை தோத்திரப் பாமாலை



## விக்கிரம வருடம் மாசித்திங்கள் 9ம் நாள் (21.02.2001)மகா சிவ்ராத்திரி வெளியீடு

வெளியீடு

**அகில இலங்கைத் திருமுறை மன்றம்**

**ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயம்**

376, கச்சேரி நல்லூர் வீதி

நல்லூர், யாழ்ப்பாணம்

அலுவலகம்:-102, அரசடி வீதி கந்தர்மடம்

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பன்னிரு திருமுறை
# தோத்திரப்பாமாலை



நால்வர் பொற்றாள் எம்முயிர்த் துணையே

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதி ஸ்ரீமுத்தவிநாயகர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் கூட்டு வழிபாட்டில் ஓதும் பாடல்கள் விக்கிரம வருஷம் மாசித்திங்கள் 9ம்நாள் 21.02.2001 மகாசிவராத்திரி அன்று வெளியிடப்பெற்றது.


வெளியீடு:

அகில இலங்கைத் திருமுறை மன்றம்

ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயம்

376, கச்சேரி நல்லூர் வீதி

நல்லூர், யாழ்ப்பாணம்

அலுவலகம் : 102, அரசடி வீதி கந்தர்மடம்

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

## வெளியீட்டுரை

திருநெறியதமிழ், குன்றாத்தமிழ், சீர்மிகுந்த தமிழ், மறையிலங்கு தமிழ், பலமிகு தமிழ், தவமல்கு தமிழ், கலைமலி தமிழ், ஆய்ந்தோதிய ஒண்தமிழ் எனச் சைவத் திருமுறைகள் விளக்கம் பெறுகின்றன. இவற்றைப் பாராயணம் செய்கின்றவர்கள் பெருவாழ்வு பெறுதல் நிச்சயம். "பாடுமின் பக்தர்கள் பரகதி பெறலாம்" என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு. இடரினுந் தளரினும் எனதுறு நோய் தொடரினுந் தொழுதெழுவேன் என்ற உறுதியோடு எக்காலமும் தொடர்ந்து பாராயணஞ் செய்ய வேண்டியன திருமுறைகள். இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும் என்று பாடுகின்றார் அப்பர் சுவாமிகள்.

இத்தகைய பயன் மிக்க திருமுறைகளைப் பாராயணஞ் செய்து பலரும் பயன்பெறும்படியாக இத் தோத்திரப் பாமாலை வெளிவருகின்றது அன்பர்கள் இல்லங்களிலே தினந்தோறும் பாராயணஞ் செய்து பயன் பெறலாம். ஆலயங்களிலும் மடங்களிலும் பலரும் கூடியிருந்து கூட்டுப்பிரார்த்தனை செய்து பயன்படுத்தலாம். இத்தோத்திரப் பாமாலை வெளிவர உதவிய வலம்புரி நாளிதழ் இயக்குநர் உயர்திரு சிவஞானம் வெற்றிவேலாயுதம் அவர்களுக்குச் சைவத் தமிழ் உலகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது இதனை அழகுற அச்சிட்டு உதவிய பிள்ளையார் அச்சகத்தினர் பாராட்டுக் குரியர்.

சிவராத்திரி
விக்கிரம வருடம்.

**வ. பேரின்பநாயகம்**
**தலைவர்.**
**அகில இலங்கைத்திருமுறை மன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பன்னிருதிருமுறை தோத்திரப்பாமாலை

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிய தேவாரம்

## முதலாந் திருமுறை

**பண்:- நட்டபாடை**

**இராகம்: கெம்பீரநாட்டை தாளம்:- ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடை யமல ரான்முனைநாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடை யபிர மாபுர மேவிய பெம்மனிவனன்றே.

அருநெறி யமறை வல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறி யபிர மாபுர மேவிய பெம்மான் னிவன் றன்னை
யொருநெறி யமனம் வைத்துணர் ஞானசம் பந்தன் னுரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே

**பண்: நட்டபாடை**

**இராகம்:- கெம்பீரநாட்டை தாளம்- ஆதி**

அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரியேந்தி யாடுங் கணபதி யீச்சரங் காமுறவே

**பண்:- நட்டபாடை**

**இராகம்:- கெம்பீரநாட்டை தாளம்:- ரூபகம்**

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாந் திருமுறை

**பண்:- காந்தாரம்**

**இராகம்:- நவரோஸ்** **தாளம்:- ரூபகம்**

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

**பண்:- பியந்தைக்காந்தாரம்**

**இராகம்:- நவரோஸ்** **தாளம்:- திரிபுடை**

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

## மூன்றாந் திருமுறை

**பண்:- புறநீர்மை**

**இராகம்:- பூபாளம்** **தாளம்:- ஆதி**

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம்
கொழிக்குங் கோணமா மலையமர்ந்தரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்:- காந்தாரபஞ்சமம்

இராகம்:- கேதாரகௌளை தாளம்:- ஆதி

இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும்
உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை மிடறினில்
அடக்கியவேதியனே
இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே.

பண்:- கௌசிகம்

இராகம்:- பைரவி தாளம்:- ஆதி

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப் பொருளாவது
நாத னாம நமச்சி வாயவே.

## திருநாவுக்கரசுநாயனார் அருளிய தேவாரம்
## நான்காந் திருமுறை

பண்:- கொல்லி

இராகம்:- நவரோஸ் தாளம்:- ஆதி

கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கேஇரவும்பகலும் பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின கம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில வீரட்டானத் துறையம்மானே.

பண்:- காந்தாரபஞ்சமம்

இராகம்:- கேதாரகௌளை தாளம்:- ஆதி

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாந் திருமுறை

**பண்:- திருக்குறுந்தொகை**

**இராகம்: மாயாமாளவகௌளை தாளம்:- ஆதி**

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

**பண்- திருக்குறுந்தொகை**

**இராகம்:- மாயாமாளவகௌளை தாளம்:- ஆதி**

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செயம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

## ஆறாந் திருமுறை

**திருவடித்திருத்தாண்டகம் இராகம் :அரிகாம்போதி**

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர் வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாயப்பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே.

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப்பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற்சோதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்திநாயனார் அருளியதேவாரம்

## ஏழாந் திருமுறை

### பண்: இந்தளம்

**இராகம் : மாயாமாளவகௌளை தாளம் : ரூபகம்**

பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
ருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேன் எனலாமே.

### பண்: நட்டராகம்

**இராகம்: பந்துவராளி தாளம்: ரூபகம்**

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

### பண்: நட்டபாடை

**இராகம்:- கெம்பீரநாட்டை தாளம்:- ரூபகம்**

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான் திருக்கேதீச்சரத் தானே.

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## எட்டாந் திருமுறை திருவாசகம்

### இராகம்: மோகனம்

### பிடித்தபத்து

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## அச்சோப்பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

## ஒன்பதாம் திருமுறை

## திருமாளிகைத்தேவர் அருளிய திருவிசைப்பா

### இராகம் : ஆனந்தபைரவி

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே.

## ஒன்பதாம் திருமுறை

## சேந்தனார் அருளியது திருப்பல்லாண்டு

### இராகம் : ஆனந்தபைரவி

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளியது திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

## பதினோராந் திருமுறை

### திருவாலவாயுடையார் அருளிச்செய்த திருமுகப்பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில் பொழி லாலவாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரவன் காண்க.
பண்பா லியாழ் பயிலபாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

### கபில தேவ நாயனார் அருளிச் செய்த மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை

திருவாக்கும் செய்கருமங் கைக்கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரியபுராணம்

உலகெலா முணர்ந் தோதற்கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்.

## அருணகிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காக வனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்.

உ

## திருநாவுக்கரசு நாயனார் அருளிய இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை

**இராகம் : மாயாமாளவகௌளை** **தாளம் : ஆதி**

திருச்சிற்றம்பலம்

புக்கணைந்து புரிந்தல ரிட்டிலர்
நக்கணைந்து நறுமலர் கொய்திலர்
சொக்கணைந்த சுடரொளி வண்ணனை
மிக்குக் காணலுற் றாரங் கிருவரே.

அலரு நீருங் கொண்டாட்டித் தெளிந்திலர்
திலக மண்டலந் தீட்டித் திரிந்திலர்
உலக மூர்த்தி யொளிநிற வண்ணனைச்
செலவு காணலுற் றாரங் கிருவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்பி நீரோ டலகுகைக் கொண்டிலர்
பூப்பெய் கூடை புனைந்து சுமந்திலர்
காப்புக் கொள்ளி கபாலிதன் வேடத்தை
ஓப்பிக் காணலுற் றாரங் கிருவரே.

நெய்யும் பாலுங் கொண்டாட்டி நினைந்திலர்
பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்
ஐயன் வெய்ய அழல்நிற வண்ணனை
மெய்யைக் காணலுற் றாரங் கிருவரே.

எருக்கங் கண்ணிகொண் டிண்டை புனைந்திலர்
பெருக்கக் கோவணம் பீறி யுடுத்திலர்
தருக்கினாற் சென்று தாழ்சடை யண்ணலை
நெருக்கிக் காணலுற் றாரங் கிருவரே.

மரங்களேறி மலர்பறித் திட்டிலர்
நிரம்ப நீர்சுமந் தாட்டி நினைந்திலர்
உரம்பொ ருந்தி யொளிநிற வண்ணனை
நிரம்பக் காணலுற் றாரங் கிருவரே.

கட்டு வாங்கங் கபாலங்கைக் கொண்டிலர்
அட்ட மாங்கங் கிடந்தடி வீழ்ந்திலர்
சிட்டன் சேவடி சென்றெய்திக் காணிய
பட்ட கட்டமுற் றாரங் கிருவரே.

வெந்த நீறு விளங்க அணிந்திலர்
கந்த மாமலர் இண்டை புனைந்திலர்
எந்தை ஏறுகந் தேறெரி வண்ணனை
அந்தங் காணலுற் றாரங் கிருவரே.

இளவெ முந்த இருங்குவ ளைம்மலர்
பிளவு செய்து பிணைத்தடி யிட்டிலர்
களவு செய்தொழிற் காமனைக் காய்ந்தவன்
அளவு காணலுற் றாரங் கிருவரே.

கண்டி பூண்டு கபாலங்கைக் கொண்டிலர்
விண்ட வான்சங்கம் விம்மவாய் வைத்திலர்
அண்ட மூர்த்தி அழல்நிற வண்ணனைக்
கெண்டிக் காணலுற் றாரங் கிருவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனன்றி லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார் அருளியது

## திருக்குறுந்தொகை

**இராகம் : மாயாமாளவகௌளை தாளம் : ஆதி**

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

ஈண்டு செஞ்சடை யாகத்துள் ஈசரோ
மூண்ட கார்மூகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்ட நீரே அருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே.

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட இக்கத வந்திறப் பிம்பினே.

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே.

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழல் ஏத்தரோ
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்குந் தாழை புறணி அருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீர்அடி கேள்உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே.

வெந்த வெண்பொடிப் பூசும்விகிர் தரோ
அந்தமில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீஅடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே.

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெருமான் இந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே.

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதிஅ ணிமறைக் காடரோ
திண்ண் மாக்கத வந்திறப் பிம்மினே.

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத்திறந் தருள் செய்ம்மினே.

அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கபிலதேவநாயனார் அருளிச் செய்த
### மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை
திருச்சிற்றம்பலம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை.

கைக்கும் பிணியொடு காலன் தலைப்படும் ஏல்வையினில்
எய்க்குங் கவலைக் கிடைந்தடைந் தேன்வெம்மை நாவளைக்கும்
பைக்கும் அரவரை யான்தந்த பாய்மத யானைபத்துத்
திக்கும் பணிநுதற் கட்டிரு வாளன் திருவடியே.

அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே அப்பம்
இடிஅவலோ டெள்ளுண்டை கன்னல் - வடிசுவையில்
தாழ்வானை ஆழ்வானைத் தன்அடியார் உள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ்.

வாழைக் கனிபல வின்கனி மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம்எள் ளுண்டைஎல் லாந்துறுக்கும்
பேழைப் பெருவயிற் றோடும் புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர் மேனி விநாயகனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

கனிய நினைவொடு நாடொறுங் காதற் படும்அடியார்க்
கினியன் இனியொரு இன்னாங் கிலம்எவ ரும்வணங்கும்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச் சடைபலி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல் யானை முகத்தவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை முகத்தான் பொருவிடையான் சேய்அழகார்
மானமணி வண்ணன் மாமருகன் - மேல்நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன்என்
உள்ளக் கருத்தின் உளன்.

உளதள வில்லதோர் காதலென் நெஞ்சில்வன் னஞ்சம்உண்ட
வளரிள மாமணி கண்டன்வண் டாடுவண் கோதைபங்கத்
திளவளர் மாமதிக் கண்ணிஎம் மான்மகன் கைம்முகத்துக்
களகள மாமதஞ் சேர்களி யானைக் கணபதியே.

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல் - மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம்.

போகபந் தத்தந்தம் இன்றிநிற் பீரபுனை தார்முடிமேல்
நாகபந் தத்தந்த நாளம் பிறைஇறை யான்பயந்த
மாகபந் தத்தந்த மாமழை போல்மதத் துக்கதப்போர்
ஏகதந் தத்தெந்தை செந்தாள் இணைபணிந் தேத்துமினே.

ஏத்தியே என்னுள்ளம் நிற்குமால் எப்பொழுதும்
மாத்தனிவெண் கோட்டு மதமுகத்துத் - தூத்தழல்போற்
செக்கர்த் திருமேனிச் செம்பொற் கழல்அங்கை
முக்கட் கடாயானை முன்.

முன்னிளங் காலத்தி லேபற்றி னேன்வெற்றி மீனுயர்த்த
மன்னிளங் காமன்றன் மைத்துன னேமணி நீலகண்டத்
தென்னிளங் காய்களிறே இமை யோர்சிங்க மேஉமையாள்
தன்னிளங் காதல னேசர ணாஉன் சரணங்களே.

சரணுடை யேன்என்று தலைதொட் டிருக்க
முரணுடையேன் அல்லேனான் முன்னம் - திரள்நெடுங்கோட்
டண்டத்தான் அப்புறத்தான் ஆனைமுகத்தான் அமரர்
பண்டத்தான் தாள் பணியாப் பண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டந்த மாதரைத் தாமென் றினியன வேபலவும்
கொண்டந்த நாள்குறு காமைக் குறுகுவர் கூருணர்விற்
கண்டந்த நீண்முடிக் கார்மத வார்சடைக் கற்றை ஒற்றை
வெண்டந்த வேழமுகத்தெம் பிரானடி வேட்கையரே.

வேட்கை வினை முடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்
தாட்கொண்டருளும் அரன் சேயை - வாட்கதிர் கொள்
காந்தார மார்பிற் கமழ்தார்க் கணபதியை
வேந்தா உடைத்தமரர் விண்.

விண்ணுதல் நுங்கிய விண்ணுமண் ணுஞ்செய் வினைப்பயனும்
பண்ணுதல் நுங்கடன் என்பர்மெய் அன்பர்கள் பாய்மதமா
கண்ணுதல் நுங்கிய நஞ்சம் உண்டார்கரு மாமிடற்றுப்
பெண்ணுத லும்பிரி யாவொரு பாகன் பெருமகனே.

பெருங்காதல் என்னோடு பொன்னோடை நெற்றி
மருங்கார வார்செவிகள் வீசி - ஒருங்கே
திருவார்ந்த செம்முகத்துக் கார்மதங்கள் சோர
வருவான்றன் நாமம் வரும்.

வருகோட் டருபெருந் தீமையும் காலன் தமரவர்கள்
அருகோட் டருமவ ராண்மையும் காய்பவன் கூர்ந்தஅன்பு
தருகோட் டருமர பிற்பத்தர் சித்தத் தறியணையும்
ஒருகோட் டிருசெவி முக்கட்செம் மேனிய ஒண்களிறே.

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் - அளியானைக்
கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்றாள்
நண்ணுவதும் நல்லார் கடன்.

நல்லார் பழிப்பில் எழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக மேபுரம் மூன்றெரித்த
வில்லான் அளித்த விநாயகனே என்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க மலர்த்திருவே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தினம்
# தினம்

# உங்கள் கரங்களில்
# உலவும்
# வலம்புரி நாள்இதழ்

அன்பளிப்பு

வலம்புரி ஸ்தாபனம்
15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org